# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.

**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018**

| தரம்: 11 | கிறிஸ்தவம் (N.R.C) | நேரம்: 3.00மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் : ………………………………………………………………

## பகுதி – I

**கவனிக்க:**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (X) இடுக.

**மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

01. “உலகின் பாவத்தைப் போக்குபவர்” என இயேசுவை அறிமுகம் செய்தவர்.
    1. ஏசாயா 2. எரேமியா 3. திருமுழுக்கு யோவான் 4. சிமோன்

02. “காரிருளில் இருந்த மக்கள் ……….. கண்டார்கள்”
    1. அன்பை 2. ஒளியை 3. கிருபையை 4. பேரொளியை

03. பத்துக்கட்டளைகளில் 8வது கட்டளைக்குரியது எது?
    1. பொய்ச்சான்று சொல்லாதே 2. களவு செய்யாதே
    3. கொலை செய்யாதே 4. விபச்சாரம் செய்யாதே

04. இம்மானுவேல் என்பதன் பொருள்
    1. கடவுள் நம்முடன் இருக்கிறார் 2. கடவுள் துணை
    3. கடவுள் பாதுகாப்பு 4. கடவுள் உதவி செய்கிறார்

05. ஏசாயா கூறும் துன்புறும் பணியாளன் யார்?
    1. யோவான் 2. இயேசு 3. பேதுரு 4. கபிரியேல்

06. இஸ்ராயேல் வரலாற்றில் அருட்பொழிவு செய்யப்பட்ட கூட்டத்தினராக கருதப்படாதோர்
    1. குருக்கள் 2. இறைவாக்கினர் 3. உயர் அதிகாரிகள் 4. அரசர்கள்

07. இயேசுவின் காலடியில் அமர்ந்து இயேசு சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த பெண்
    1. பார்த்தா 2. மரியா 3. சமாரியப் பெண் 4. யோவன்னா

08. இயேசுவின் உடையைத் தொட்டு நம்பிக்கையினால் சுகமடைந்தவர் எத்தனை வருடங்கள் நோயினால் துன்பப்பட்டார்?

1. 18 வருடங்கள் 2. 30 வருடங்கள் 3. 20 வருடங்கள் 4. 12 வருடங்கள்

09. தம்மை நீதிமான்களாகக் கருதி பெருமை கொண்டவர்கள்?

1. பரிசேயர் 2. சதுசேயர் 3. மறைநூல் அறிஞர் 4. சமாரியர்

10. "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன" என இயேசு கூறிய நோயாளி

1. குருடன் 2. தீய ஆவி பிடித்தவனுக்கு

3. முடக்குவாதக்காரனுக்கு 4. சூம்பிய கையுடையவனுக்கு

11. "சாதோக்" என்ற வழி மரபில் வந்தவர்கள்?

1. பரிசேயர் 2. சதுசேயர் 3. மறைநூல் அறிஞர் 4. சமாரியர்

12. திருச்சட்டத்தின் மையம் எது?

1. நம்பிக்கை 2. அன்பு 3. விசுவாசம் 4. பணிவாழ்வு

13. "இயேசு எருசலேமுக்கு கழுதையில் சென்றார்" கழுதை எதன் அடையாளமாக கருதப்பட்டது.

1. தாழ்மை 2. வீரம் 3. பொறுமை 4. நம்பிக்கை

14. "ரபி" என்பதன் பொருள்

1. ஆயன் 2. குரு 3. போதகர் 4. மெசியா

15. இஸ்ரயேல் மக்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டதற்காக நன்றி செலுத்தும் தினம்

1. பெந்தக்கோஸ்தே விழா 2. கூடார விழா

3. பாஸ்கா விழா 4. அர்ப்பணிப்பு விழா

16. ஒரு அப்பத்தை பிட்டு உட்கொள்ளுதல், ஒரே கிண்ணத்தில் அருந்துதல் என்பவற்றில் வெளிப்படுத்தப்படும் அடையாளம்

1. சகோதரத்துவம் 2. தாழ்மை 3. நட்பு 4. அன்பு

17. இயேசுக்கு மரண தண்டனை வழங்கியவர்

1. ஏரோது 2. பிலாத்து 3. பெஸ்து 4. கைப்பாஸ்

18. யூத நீதிமன்றம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

1. சனகரீம் 2. சினக்கொக் 3. மண்டைஓடு 4. சீலோவாம்

19. ''அனைவருக்கும் இறைசமூகத்துக்கு செல்லும் வரம் கிடைத்துள்ளது'' என்பதை விளக்கும் நிகழ்வு.

1. நாடு முழுவதும் இருள் உண்டானது.
2. தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது.
3. மழை பொழிந்தது.
4. மின்னலடித்தது.

20. ''நீர் கடவுளின் மெசியா'' என இயேசுவை அறிக்கையிட்டவர்.

1. யோவான் 2. பேதுரு 3. யாக்கோபு 4. மத்தேயு

21. நாம் சோதனைகளை முகம் கொடுக்க நேரிடம் போது

1. கடவுளை வெறுக்க வேண்டும்.
2. சோதித்து பார்க்க வேண்டும்.
3. இறை வேண்டுதலோடும் நம்பிக்கையோடும் செயற்படவேண்டும்.
4. மனம் தளர்ந்து போக வேண்டும்.

22. இறையரசின் பெறுமதிகளாக அமையாதது

1. இறைபயம் , நீதி, நேர்மை.
2. அர்ப்பணிப்பு, நீதி, சமாதானம்
3. நேர்மை, பொருளாதார நலன், அர்ப்பணிப்பு
4. சமாதானம், இறைபயம், நேர்மை

23. தீய ஆயரின் பண்புகளில் ஒன்று

1. காயங்களுக்கு மருந்திடுவார் 2. கருணையோடு பராமரிப்பார்
3. மந்தைகளின் குரலுக்கு செவிசாய்க்கமாட்டார் 4. நீர்நிலைக்கு அழைத்துச் செல்வார்.

24. ''அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக'' எனப் பஷல் கூறியது.

1. எபேசியருக்கு 2. ரோமருக்கு 3.கொரிந்தியருக்கு 4. கொலோசேயருக்கு

25. ''ஐரேனியா'' என்றும் கிரேக்கச் சொல்லின் பொருள்.

1. முழுமையான சமாதானம் 2. முழுமையான அன்பு
3. யாவேயின் அன்பு 3. விசுவாசம்

26. மன்னிக்க மறுத்த பணியானம் உவமை மூலம் நாம் பெறும் முன்மாதிரிகள் அல்லாதது.

1. மன்னிப்பு வழங்குதல் இறைபண்பாகும்.
2. மன்னிப்புக்கேட்டல் தவறானது அல்ல
3. மன்னிப்பு வழங்குதல் எந்த நேரத்திலும் அவசியமானது அல்ல
4. மன்னிப்பு அனைவருக்கும் அவசியம்

27. வேதாகமத்தில் ''மேகம்'' என்ற சொல் குறிப்பது.

1. வெளிச்சம் 2. பரிசுத்தம் 3. வெளிப்பாடு 4. இறைபிரசன்னம்

28. பவுலொஸ் என்ற உரோமைப் பெயரால் அழைக்கப்பட்டவர்

1. லூக்கா 2. பர்னபா 3. பவுல் 4. சிமோன்

29. ''தெய்வங்கள் மனித உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கின்றன'' இக்கூற்று பேசப்பட்ட இடம்

1. லீஸ்திரா 2. இக்கோனியா 3. பெருகை 4. கானான்

30. சேயுசு, எர்மசு என்ற பெயரினால் அழைக்கப்பட்டவர்கள்.

1. பவுல், பர்ணபா  2. பவுல் சீலா  3. லூக்கா, யோவான் 4. சீலா, பர்ணபா

**பின்வருவனவற்றை அடிப்படையாக கொண்டு 31 – 34 விடை தருக.**

(A) பவுல்
(B) யோவான் மற்றும் மாற்கு
(C) பர்ணபா
(D) லூக்கா
(E) சீலா

31. முதலாவது மறைத்தூதுப் பயணத்தில் பவுலையும் அவரது குழுவினரையும் விட்டு இடை நடுவில் திருப்பியவர்

1. D  2. E  3. C  4. B

32. திருத்தூதர் பணி நூலை எழுதியவர்

1. A  2. D  3. C  4. B

33. இறை ஏவுதலின் நிமித்தம் அந்தியோக்கிய திருச்சபையில் இறை பணிக்காக தெரிவு செய்யப்பட்டவர்

1. AD  2. CB  3. AC  4. DE

34. இரண்டாம் மறைத்தூதுப்பயணத்தில் பிலிப்பு பட்டணதில் சிறைப்பட்டவர்கள்

1. AC  2. AB  3. CE  4. AE

35. நாம் இறைதொடர்பை வளர்த்துக் கொள்ள அவசியமானது?

1. அன்பு  2. இரக்கம்  3. மன்னிப்பு  4. ஜெபம்

36. நாம் எமது வாழ்வில் சோதனைகளை எதன்மூலம் வெற்றி கொள்ள வேண்டும்.

1. இறைவார்த்தை  2. அனுபவம்  3.சுயபெலன்  4. பிறரின் உதவிகள்

37. பாலைவனத்தில் கடினமான பயணத்தை மேற்கொள்ள முன்வந்தவர்

1. ஆபிரகாம்  2. மோசே  3. யோவான்  4.பேதுரு

38. சபை என்பது.

1. ஒரு வீடு  2. திருச்சபை கட்டிடம்
3. கடவுளின் பிள்ளைகள் ஒன்று கூடும் இடம்  4. இறையரசு

39. அகாப்பே என்பது

1. அன்பு  2. இரக்கம்  3. சமாதானம்  4. நீதி

40. இயேசுவின் 12 சீடர்களுள் அடங்காதவர்

1. பேதுரு  2. தோமா  3. யோவான்  4. பவுல்

(40x1=40 புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**I. சுருக்கமான விடை தருக.**

1. அக்கில்லா, பிரிஸ்கில்லா செய்த தொழில் யாது?
2. இயேசு 12 சீடர்களையும் பணிக்கு அனுப்பிய போது அவர்களுக்கு வழங்கிய அறிவுரைகள் 2 தருக.
3. துன்புறும் ஊழியரின் இயல்புகள் 2 தரக.
4. பெந்தக் கொஸ்தே தினத்தன்று இடம் பெற்ற நிகழ்வுகள் 2 தருக.
5. கொரிந்தில் பவுல் எத்தனை வருடம் தங்கியிருந்தார்? என்ன தொழில் செய்தான்?
6. யூதர்கள் அர்ப்பணிப்பு வைபவம், விருந்த சேதனம் எத்தனை நாள்களில் செய்வார்கள்?
7. பவுல் யாரிடம் கல்வி கற்றார்?
8. முதல் இரத்தசாட்சியாக மரித்தவர் யார்?
9. ஆண்டவரின் அழைப்பை கேட்டு தனது தாய்நாடு, வீடு, உடைமைகள் யாவற்றையும் விட்டுப்புறப்பட்டவர் யார்?
10. மரித்தோரை உயிர் பெறல் என்ற இறையரசின் அடையாளங்கள் 2 தருக.

(20x1=20 புள்ளிகள்)

**II.**
1. பவுலின் இரண்டாவது மறைத்தூது பணியின் போது அவருடன் சென்ற பயணத் தோழர்கள் யார்?
2. இரண்டாம் மறைத்தூதுப்பணியின் போது சென்ற இடங்கள் 3 தருக.
3. இரண்டாம் பயணத்தின் போது இடம்பெற்ற முக்கிய சம்பவம் ஒன்றை விவரித்து அதன் மூலம் நீர் கற்றுக் கொண்ட படிப்பினையைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

**III.**
1. இறைத்திட்டத்துக்கு கீழ்ப்படிந்தவர்கள் இருவரைத் தருக.
2. அவர்களில் ஒருவரைப்பற்றி விளக்குக.
3. இறைபணிக்கான அழைப்பு உமக்கு கிடைத்தால் நீர் அப்பணியை எவ்வாறு மேற்கொள்வீர்? விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

**IV.**
1. யூத சமயச் சடங்குகள் 2 தருக.
2. இயேசுவின் பெற்றோர் யூத சமய சடங்குகளை எவ்வாறு நிறைவேற்றினார்கள்?
3. இலங்கையர் என்ற ரீதியில் எமது நாட்டில் நடைபெறுகின்ற கலாசார சம்பிரதாய நிகழ்வுகளின் போது நாம் எவ்வாறு செயற்பட வேண்டும்? விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

V. 1. இயேசுவை அடக்கம் செய்த கல்லறைக்குச் சென்ற பெண்களுக்கு "அவர் இங்கு இல்லை அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்" என்ற செய்தியைக் கூறியவர் யார்?

2. உயிர்த்த இயேசு சீடர்களுக்கு காட்சி கொடுத்த சந்தர்ப்பங்கள் 2 தருக.

3. இயேசு நிரந்தரமாகவே எம்மருகில் இருக்கிறார். ஆனால் எம்மால் அவரை அறிந்து கொள்ள முடியவில்லை. இதற்கான காரணங்கள் 3 தருக.

(2+3+5=10 புள்ளிகள்)

VI. 1. இயேசுவின் காலத்தில் யூத சமூகத்தினர் அனுபவித்த துன்பங்கள் 2 தருக.

2. சதுசேயரால் இயேசுவுக்கு ஏற்பட்ட சவால்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

3. உமது வாழ்வில் நேர் எதிர் கொண்ட சவால்கள் இரண்டினை முன்வைத்து அவற்றினை எவ்வாறு வெற்றி கொண்டீர் என்பதை விபரிக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

VII. விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. நல்லாயனின் பண்பு
2. துன்புறும் ஊழியன்
3. அன்பு
4. ஒருமைப்பாடான சமூகம்
5. ஆதிகிறிஸ்தவ சபையின் செயற்பாடுகள்

(5+5=10 புள்ளிகள்)